**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**SUB JUDGE**

**S.C. No.597 / 2023**

Deposition of witness for PW10

Name : **திரு.பால்ராஜ்**

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

LW12 திரு.பால்ராஜ் சாட்சி அழைப்பாணை பெயரில் ஆஜர் அ.சா.10 ஆக விசாரணை.

**முதல் விசாரணை:-**

சத்தியமாக சொல்கிறேன். தற்போது வில்லூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2023ம் தேதி 21.30 மணிக்கு உத்தபநாயக்கனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் ஆக பணிபுரிந்தபோது மனு ரசீது எண்.113/2023 பார்வையிட்டு உத்தபநாயக்கனூர் காவல்நிலைய குற்ற எண்.60/2023 இதச பிரிவு 308-ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6.** பின்னர் 25.03.2023ம் தேதியில் காலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான வித்யா, சுவேதா முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7** வழக்கின் சாட்சிகளான உஷாகனி, வித்யா, தேவி, வனம், லட்சுமி ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம்

பெற்று வழக்கின் கோப்பினை மேல் அதிகாரியான காவல் ஆய்வாளர் அவர்களிடம் சமர்பித்தேன். வழக்கின் முழுவிவரங்களையும் என்னிடம் விசாரித்து தெரிந்து கொண்டார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 21.03.2023 காலை 6.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்ற நாள் 24.03.2023 இரவு 9.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். காலதாமத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். அ.சா.4 திருமதி.லட்சுமி அவர்களுக்கு மின்சாரம் தாக்கியதால் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மின்சார வயரை கைப்பற்றவில்லை. மின்சார வயர் அறுந்து இருந்தாக சொல்லப்பட்டுள்ளதை பொறுத்து அறுந்து இருந்தாக காட்டக் கூடிய புகைப்படங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. பொதுப்பாதையில் மின்சார வயர் கிடந்ததாக காட்டக்கூடிய புகைப்படம் எதுவும் எடுக்கப்படவில்லை. அ.சா.1 உஷாகனி முதல் விசாரணையில் சொல்லியவாறு அ.சா.4 திருமதி.லட்சுமி மாடுகளை கட்டி வைத்துவிட்டு திரும்பும்போது மின்சார வயர் காலில் சுற்றியதாக எனது விசாரணையிலும் புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 திருமதி.உஷாகனி எனது விசாரணையில் மின்சார வயர் வெடித்து இருந்ததாகவும் அ.சா.1–ன் மகன் கம்பால் அ.சா.4 திருமதி.லட்சுமியை கம்பால் அடித்து காப்பாற்றியதாகவும், அருகில் இருந்த பெண்கள் அ.சா.4 ஐ நெஞ்சில் அடித்து சுவாதத்தை மீட்டு உயிர் கொண்டு வந்ததாகவும், விசாரணையிலும் புகார் மனுவிலும் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். அ.சா.4 ஐ கம்பால் அடித்து காப்பாற்றிய அ.சா.1–ன் மகன்

இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் ஆமாம்.புகார் மனுவில் அ.சா.4 திருமதி.லட்சுமிக்கு வலது கை இருவிரல்கள் வெந்து கருகி இருந்ததாக புகாரிலும், அ.சா.1 சொல்லவில்லை. அ.சா.1 , அ.சா.4–ன் மகள் என்றால் ஆமாம். எனது விசாரணையில் எதிரிக்கும் அ.சா.1, அ.சா.4க்கும் இடையே நிலத்திற்கு நீர் பாய்ச்சுவது சம்மந்தமாக உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.14/2018 என்ற வழக்கு இருந்தது பற்றி எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 முதல் 7 வரையிலான சாட்சியங்களை நான் தான் புலன் விசாரணையில் விசாரணை செய்தேன். அ.சா.5 மற்றும் 6 அவர்களை சம்பவ இடத்தில் விசாரணை செய்தேன். மற்ற சாட்சிகளை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்று தற்போது ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் நிலம்பற்றி அடையாளம் காட்டப்படவில்லை. அ.சா.1 ன் உறவினர்கள் தான் அ.சா.2, 3 என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.4 மின்சார வயர் தாக்கியதாக சொல்லப்பட்ட பிறகு அம்மா என்று அலரியதாக அ.சா.2 மற்றும் 3 விசாரணையில் சொல்லி உள்ளவாறு நான் புலன் விசாரணை சமயத்தில் அவர்களை நான் விசாரித்துபோது சொல்லவில்லை என்றால் ஆமாம். அ.சா.2 சாட்சியத்தில் வழக்கு சம்பவ சமயத்தில் எதிரி அங்கு இருந்தாக சொல்லி உள்ளவாறு எனது புலன் விசாரணையில் சொல்லவில்லை. வழக்கு சம்வத்திற்கு முன்பாக எதிரி மீது அ.சா.1 அல்லது அ.சா4 ஆகியோர்கள் காவல்நிலையத்தில் எதிரி மிரட்டியதாகவோ, திட்டியதாகவோ எவ்வித புகாரும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அ.சா.4 அவரையும் அவரது மகளையும் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரியிடம் புகார் செய்துள்ளதால் தன்னையும், மகளையும் கழுத்தை

அறுத்து போட்டுவிடுவேன் என்று எதிரி சொன்னதாக எனது புலன் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 வித்யா அ.சா.4—ன் உடன் கருகிய நிலையில் இருந்தாக சாட்சியத்தில் சொல்லியுள்ளவாறு நான் விசாரித்தபோது சொல்லவில்லை. சம்பவ இடம் தோட்டம் மற்றும் அதை சுற்றி வீடுகள் இருந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு வீடுகள் இருந்தது வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சாட்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா.4 திருமதி.லட்சுமி அரது வீட்டில் மழைநீரால் வழுக்கிவிழுந்தது மின்சார வயர் தாக்கி வலது கையில் காயம் ஏற்பட்டது என்றும் இந்த எதிரிக்கும் அ.சா.1 மற்றும் அ.சா.4க்கும் நிலம் சம்ந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதை மனதில் வைத்துக்கொண்டு எதிரியை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் அவ்வாறு அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1ற்கு ஆதாரவாக உறவினர்களை சாட்சியாக காட்டி விசாரணை செய்து ஒருதலைபட்சமாக இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.13 12:12:28 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.